19. 02. 2010

**ஊடக அறிக்கை**

# மார்ச் மாதம் 28.03.2010ல் நடைபெறவுள்ள மக்களவைத் தேர்தலிற்கான அங்குரார்பண ஒன்றுகூடல் சுவிசில் 20, 21 பெப்ரவரி (சனி, ஞாயிறு) ஆகிய இருதினங்களில் நடைபெறவுள்ளது

கடந்த தைமாதம் 23ம் 24ம் திகதிகளில் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் அடிப்படையில் கோரப்பட்டிருந்த மக்கள் ஆணைக்கு அதை மீண்டும் உறுதிப்படுத்தும் வகையில் அமோக வாக்களித்து தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்ற அம்சங்களின் அடிப்படையில் இறைமை கொண்ட சுதந்திர தமிழீழ அரசிற்கான அரசியல் அடித்தளத்தை சுவிஸ் வாழ் தமிழ் மக்கள் அமைத்துள்ளார்கள்.

இந்த அம்சங்களிற்கு இசைவாக ஒரு மக்கள் சபையை அமைப்பதே அடுத்த கட்ட நடவடிக்கையாகும். அப்படி அமைக்கப்படும் மக்களவையானது மக்களால் மக்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளை கொண்டதாகும். அத்தகையதொரு மக்களவையை அமைப்பதற்குரிய முன்னோடி வேலைகளை சுவிஸ் தமிழ் தேர்தல் குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

மக்கள் மத்தியில் இந்த மக்கள் சபை மற்றும் அதற்கான அடுத்த கட்ட தேர்தல் சார்ந்த விளக்கங்களை அளிப்பதற்காக வரும் சனி ஞாயிறு தினங்களில் சுவிசின் 4 இடங்களில் பொதுக்கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. மக்களவை சார்ந்த கருத்தரங்குகள் பொதுக்கூட்டங்கள் தொடர்ச்சியாக நடைபெறும் என்பதை இத்தருணம் அறியத்தருகின்றோம்.

தற்சமயமுள்ள தேர்தல்குழுவினருக்கு பக்க பலமாக பல அமைப்புக்கள் இருந்து வருவது சகலரும் அறிந்ததே. இருந்தும் எமது தேர்தல் குழுவிற்கு பலமான ஒரு தேர்தல் சபையை அமைக்கும் பொருட்டும் மேலும் தேர்தல் குழுவில் ஆளுமையான நபர்களை உள்வாங்கும்

**Tamil Election Switzerland**
DEMOCRACY, TRANSPARENCY AND FAIRNESS

பொருட்டும் பொதுக்கூட்டங்களில் விண்ணப்பிக்க முடியும் என அறியத்தருகின்றோம்.

பொதுக்கூட்டங்கள் நடைபெறும் இடங்கள்: இதிலுள்ள தொடர்பு இலக்கங்கள் கூட்ட ஏற்பாட்டுக்கு மட்டுமே பயன்படுத்தவும்!

| சனிக்கிழமை<br>20. Februar 2010 | |
|---|---|
| Tamilar Illam<br>Teufenerstrasse 11<br>9000 St. Gallen<br>16.00 19.00<br>071 223 60 86 | Greulich Hotel<br>Herman-Greulich-Strasse 56<br>8004 Zürich<br>20.00 – 23.00<br>078 870 41 44 |
| ஞாயிற்றுக்கிழமை<br>21. Februar 2010 | |
| 21. Februar 2010<br>Tamilar Illam<br>Av. D`Echallens 30<br>1004 Lausanne<br>14.00 – 17.00<br>079 586 96 61 | 21. Februar 2010<br>National Hotel Bern<br>Hirschengraben 24<br>3003 Bern<br>18.00 – 21.00<br>079 460 80 23 |

சுவிஸ் தேர்தல் குழு
(இது பல தமிழ் அமைப்புக்களின் ஒருங்கிணைந்த வேலைத்திட்டமாகும்)